**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 207/2021
Prosecution side witness for P.W.10

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திரு. நவநீதபிரபு | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.02.2026**
**A1, A2 are prsent.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 2021 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அரசுமருத்துவமனையில் உதவி அரசு மருத்துவராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 03.03.2021 அன்று நான் பணியில் இருந்தபோது காலை 11.00 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் விண்ணப்பத்துடன் காவலர் 4636 பால்பாண்டி என்பவர் மூலம் கொடுத்தனுப்பிய தபாலை பார்வையிட்டேன். அதில் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண். 50/2021 சட்டபிரிவுகள் 294 பி, 302, 506(2) இதச வழக்கில் இறந்துபோன 45 வயது மதிக்கத்தக்க கணேசன் என்பவரின் ஆண்பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக என்னிடம் காவலர் வேண்டுகோள் கடிதத்துடன் அடையாளம் காண்பித்தார்.

BREETHA M
Digitally signed by BREETHA M
Date: 2026.02.11 18:09:12 +0530

பிரேதமானது நல்ல உடல் தேகத்துடன் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. 2 கண்களும் மூடி காணப்பட்டன. வாய் மூடி காணப்பட்டது. பிரேதத்தில் விறைப்பு தன்மை 2 கைகளிலும், கால்களிலும் காணப்பட்டது. பிரேத பரிசோதனையை நான் அன்றையதினம் மதியம் 12.05 மணிக்கு ஆரம்பித்தேன். மேற்படி பிரேதத்தில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

காயம் எண். 1 – வலது மணிக்கட்டில் 6 செ.மீ நீளம், 3 செ.மீ ஆழம், 3 செ.மீ அகலம் என்று சிதைந்த காயம் காணப்பட்டது. ரேடியஸ் எலும்பு முறிந்து காணப்பட்டது.

காயம் எண். 2 – 10 செ.மீ நீளம், 3 செ.மீ அகலம், 4 செ.மீ ஆழமுள்ள சிதைந்த வெட்டுகாயம் வலது கன்னத்தின் வலது காதிற்கு கீழ் காணப்பட்டது.

காயம் எண். 3– வலது தாடை அருகே 9 செ.மீ நீளம், 3 செ.மீ அகலம், 3 செ.மீ ஆழமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 4– கீழ் உதட்டின் அடியில் 3 செ.மீ நீளம், 2 செ.மீ அகலம், 2 ஆழமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 5 – கபாலத்தின் வலதுபுறத்தில் வலது புருவத்திலிருந்து வலது காதின் பின்புறம் வரை 16 செ.மீ நீளம், 3 செ.மீ அகலம் 2 செ.மீ ஆழமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 6– வலது பக்க காறை எலும்பிற்கு மேல் 10 செ.மீ நீளம், 5 செ.மீ அகலம், 3 செ.மீ ஆழமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 7– கழுத்தின் வலது பக்கத்தில் 7 செ.மீ நீளம், 3 செ.மீ ஆழம், 3 செ.மீ அகலமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 8– பின்கழுத்து பகுதியில் 4 செ.மீ நீளம், 1 செ.மீ அகலம், 1 செ.மீ ஆழமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

BREETHA M
Digitally signed by BREETHA M
Date: 2026.02.11 18:09:19 +0530

காயம் எண். 9– கழுத்தின் பின்பகுதியில் 24 செ.மீ நீளம், 9 செ.மீ அகலம், 5 செ.மீ ஆழமான வெட்டுக்காயம், பின்கழுத்தின் நடுப்பகுதியிலிருந்து வலது தோள்பட்டை வரை காணப்பட்டது. காயத்தின் வழியாக வலது தோள்பட்டை எலும்பு முறிந்து காணப்பட்டது.

காயம் எண். 10 – பின்கழுத்தின் நடுப்பகுதியிலிருந்து இடது பக்க தோள்பட்டை வரை 14 செ.மீ நீளம், 4 செ.மீ அகலம், 3 செ.மீ ஆழமுள்ள சிதைந்த வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 11 – வலது கை மணிக்கட்டில் காரை எலும்பு முறிந்து காணப்பட்டது.

காயம் எண். 12 – வலது தோள்பட்டை எலும்பின் மேல்புறம் முறிந்து காணப்பட்டது.

உடல் உள்ளுறுப்புகளை கழுத்திலிருந்து நெஞ்சறை மற்றும் வயிற்று பகுதியை கிழித்து பரிசோதனை செய்தபோது, நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. நெஞ்சறையில் இதயம் நல்லநிலையில் இருந்தது, அதன் வெட்டுதோற்றம் வெளிறியும் இரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகங்கள் நல்லநிலையில் இருந்தது, அதன் வெட்டுதோற்றம் வெளிறியும் இரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. வயிற்றில் எவ்வித பொருளும் இல்லை. பிரேத பரிசோதனையை அன்றையதினம் மதியம் 1.45 மணியளவில் முடித்து, மேற்படி இறந்துபோனவர் அவருக்கு ஏற்பட்ட பலவிதமான காயத்தினாலும், அதிர்ச்சியினாலும் இரத்தபோக்கினாலும் பிரேத பரிசோதனைக்கு முன் 12 லிருந்து 24 மணிநேரத்திற்குள் இறந்திருக்ககூடும் என்று கருத்துரை வழங்கி, பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். அதற்கான நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–9** ஆகும். மேற்படி காயங்கள்

BREETHA M Digitally signed by BREETHA M Date: 2026.02.11 18:09:25 +0530

நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.பொ.3 மற்றும் 4 அரிவாள்களால் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மாறி மாறி வெட்டும்போது ஏற்பட வாய்ப்புண்டு. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கூர்மையான ஆயுதத்தால் மாறி மாறி வெட்டினால் சிதைந்த காயங்கள் போன்று தோன்றும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M Digitally signed by BREETHA M Date: 2026.02.11 18:09:34 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 207/2021
Prosecution side witness for P.W.11

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. ஜெயந்தி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.02.2026**
**A1, A2 are prsent.**

<u>**முதல் விசாரணை:–**</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2021 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 1797 ஆகும். கடந்த 02.03.2021 அன்று நான் பணியில் இருந்தபோது காலை 23.00 மணியளவில் சாத்தான்குளம் தாலுகா, கட்டாரிமங்கலம் கிராமம், கீழஅம்பலசேரி நாடார் தெருவை சேர்ந்த கோவில்பிச்சை என்பவரின் மகன் சின்னப்பா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று அந்த புகார்மனுவின் தன்மைக்கேற்ப சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண். 50/2021 சட்டபிரிவுகள் 294 பி, 302, 506(2) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். அதன் முதல்தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார்மனுவையும் இணைத்து கனம் குற்றவியல்

BREETHA M
Digitally signed by BREETHA M
Date: 2026.02.11 18:10:09 +0530

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சாத்தான்குளம் அவர்களுக்கு துரித தபாலாக காவலர் பாண்டியராஜன் என்பவர் மூலம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு தகவல் சொல்லி வைத்தேன். வாதி சின்னப்பா என்னிடம் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ–1 தான். அதன் தன்மைகேற்ப நான் தயார் செய்த கணினி வழியிலான முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–10** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M Digitally signed by BREETHA M Date: 2026.02.11 18:10:17 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 207/2021
Prosecution side witness for P.W.12

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பாண்டியராஜன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.02.2026**
**A1, A2 are prsent.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடம் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2021 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண்.4443 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக கடந்த 03.03.2021 அன்று நான் பணியில் இருந்தபோது காலை 8.00 மணியளவில் சாத்தான்குளம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் சாத்தான்குளம் காவல்நிலைய குற்ற எண். 50/2021 சட்டபிரிவுகள் 294பி, 302, 506(2) இதசவாக வழக்சின் முதல்தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார்மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சாத்தான்குளம் அவர்கள் நீதிமன்றத்தில் ஒப்படைத்து வர கடவுச்சீட்டு கொடுத்தார்கள். தபாலையும், கடவுச்சீட்டையும் பெற்று கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சாத்தான்குளம் அவர்கள்

BREETHA M Digitally signed by BREETHA M Date: 2026.02.11 18:10:24 +0530

நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஒப்பம் பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். எனக்கு பணி ஒதுக்கி வழங்கப்பட்ட கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–11** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.02.11 18:10:32 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.